**மில்கோ பிறைவேட் லிமிட்டட் - 2018**

மில்கோ பிறைவேட் லிமிட்டட்டின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிப்பது தொடர்பாக முகாமைத்துவத்தினதும் கட்டுப்படுத்தும் தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

கணக்காய்வு செய்யப்படும் அனைத்து நிறுவனங்களும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் அந் நிறுவனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும். அதிகாரச்சட்டத்தின் 16(2) ஆம் பிரிவின் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரால் கணக்காய்வு செய்யப்படும் அனைத்து நிறுவனங்கள் தொடர்பான வருடாந்த நிதிக்கூற்றுக்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியொன்றினுள் பிரமாணங்களின் பிரகாரம் கையளிக்கப்படக்கூடிய வருடாந்த செயலாற்றல் அறிக்கைகள் என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமாப்பிக்கப்பட வேண்டும். 38(1)(ஈ) பிரிவின் பிரகாரம் வருடாந்த அறிக்கைகள் மற்றும் ஏனைய நிதிக்கூற்றுக்கள் தேவையான காலத்தினுள் தயாரிக்கப்பட வேண்டுனெ உறுதிப்படுத்தப்பட வேண்டும். மேலும் கணக்காய்வு செய்யப்பட்ட நிறுவனத்தின் தொடர்புபட்ட அறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்கான கணக்களிப்பொறுப்பு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரிற்கு காணப்பட வேண்டும்.

**1.3 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்**

2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களினுள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் வரைபு வருடாந்த அறிக்கை என்பன 2020 மார்ச் 11 ஆம் திகதி வரையிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**1.4 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் என்பன பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது.

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 150(1) ஆம் பிரிவின் பிரகாரம் ஐந்தொகை திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுதல் பொறுப்புக் கூற வேண்டிய தனிநபரால் உறுதிப்படுத்தப்படுவதை கம்பனி பணிப்பாளர் சபை உறுதிப்படுத்த வேண்டும்.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

நடைமுறையல்லாச் சொத்துக்களிற்கான பெறுமானத்தேய்வு, பிரதான அலுவலகத்தின் சம்பளங்கள் மற்றும் கூலிகள் மற்றும் வரி என்பவற்றை பிரயோகிப்பதற்கு முன்பு கடந்த 5 ஆண்டுகளின் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பங்களிப்பு ரூபா 629 மில்லியனிலிருந்து ரூபா 212 மில்லியன் வரை குறைவடைந்திருந்தது.

### 2.2 விகிதப் பகுப்பாய்வு

தொழிற்சாலை புனரமைப்பு செயற்திட்டம் மற்றும் படல்கம செயற்திட்டம் என்பவற்றிற்காக கடன்கள் பெறப்பட்டதன் காரணமாக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது கம்பனியின் இணைவு விகிதம் 0.64 தொடக்கம் 9.8 வரை அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 இனங்காணப்பட்ட நட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) அம்பேவல தொழிற்சாலையில் புதிய DESMI இயந்திரத்தை ஸ்தாபித்த பின்னர் தடிப்பான பால் கழிவு அதிகரித்திருந்தது. பழைய பொறியில் உற்பத்தி சுழற்சியின் இறுதியில் சுத்தப்படுத்தும் செயன்முறையின் போது அகற்றப்படுகின்ற பால் தாங்கியொன்றில் களஞ்சியப்படுத்தப்பட்டு மீண்டும் உற்பத்திக்குச் சேர்க்கப்படுகின்றது. ஆனால் உற்பத்தி சுழற்சியொன்று முடிவடைந்த பின்னர் புதிய DESMI இயந்திரத்தை சுத்தப்படுத்தும் போது மீண்டும் உற்பத்திக்கு அப்பாலை சேகரிப்பதற்கான தொழில்நுட்பமொன்று காணப்படாததுடன் ரூபா 74,206 பெறுமதியான ஏறத்தாழ 1080ml பால் வீணாக்கப்பட்டிருந்தது. உரிய பொறுப்புக்கூற வேண்டிய காலப்பகுதியினுள் DESMI செயற்திட்ட பொறியியலாளர்களுடன் அல்லது ஏனைய எவரேனும் பொறுப்பான தரப்பினர்களுடன் அக் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. (இந் நிலைமை முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்களினால் ஏற்பட்டது.) | புதிய DESMI இயந்திரக் கழிவு அதிகரிப்பதை குறைப்பதற்கு பொறுப்பான தரப்பினர்கள் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கழிவுகள் அதிகரிப்பதை குறைப்பதற்கு தேவையான படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | மிகுதிப் பாலை மீண்டும் உற்பத்திக்கு சேகரிப்பதற்காக புதிய இயந்திரத்திற்கான புதிய குழாய் முறைமையொன்றை தயாரிப்பதற்கு ரூபா 1,020,000 பெறுமதியான கிரய மதிப்பீடொன்று 2018 செப்தெம்பர் 17 இல் நிறைவேற்றுப் பொறியியலாளர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அம் மதிப்பீட்டுக் கிரயம் அக் கழிவை தடுப்பதன் மூலம் 46 நாட்களினுள் மேவுகை செய்யப்படக் கூடியதாக இருந்த போதிலும் அம் முன்மொழிவு தொடர்பான சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் 2018 திசெம்பர் 31 அளவில் புதிய இயந்திரத்தின் உற்பத்தியை ஆரம்பித்த பின்னர் 01 ஆண்டும் 05 மாதங்களும் ஆகியிருந்த போதிலும் தொழிற்சாலை கழிவை குறைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. (இந் நிலைமை முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்களினால் ஏற்பட்டது.) | முன்மொழியப்பட்ட நடவடிக்கை தொடர்பாக சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொண்டு உற்பத்திக்கு மீண்டும் மிகுதிப் பாலை சேகரித்து வழங்குவதன் மூலம் தொழிற்சாலைக் கழிவை குறைப்பது தொடர்பாக பொறுப்பான தரப்பினர்கள் செயற்பட வேண்டும். |
| (இ) | புதிய இயந்திரத்தின் உற்பத்திக்காக பயன்படுத்தப்பட்ட கொதிகலன் செயற்பாடற்று காணப்பட்ட போதும் அதனை சுத்தப்படுத்தும் போதும் ஒரே நேரத்தில் ரூபா 74,206 பெறுமதியான ஏறத்தாழ 1080ml பால் அகற்றப்பட்டிருந்ததுடன் 2018 ஒக்தோபர் மற்றும் நவம்பர் ஆகிய கருத்தில் கொள்ளப்பட்ட இரண்டு மாத மாதிரிக் காலப்பகுதியின் போது கொதிகலன் 18 தடவைகள் செயற்பாடற்றிருந்தது. அதன் பிரகாரம் மீண்டும் கொதிகலனை சுத்தப்படுத்தும் போது இரண்டு மாதங்களினுள் ரூபா 1,237,050 பெறுமதியான 18,000 லீற்றர் பால் வீணாகியிருந்ததுடன் இது வருடாந்தம் மிகவும் பெரியளவிலான நட்டமொன்றாக காணப்படுகின்றதுடன் 2019 திசெம்பர் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. (இந் நிலைமை முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்களினால் ஏற்பட்டது.) | கொதிகலனின் அசாதாரண செயற்பாடற்ற தன்மை மற்றும் பால் கழிவு என்பவற்றை குறைப்பதற்கு பொறுப்பான தரப்பினர்கள் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | 31 வரை இந்த அசாதாரண செயற்பாடற்ற தனமையை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | தொழிற்சாலை புனரமைப்பு செயற்திட்டத்தின் கீழ் புதிய இயந்திரத்தை ஸ்தாபித்த பின்னர் ஆய்வுகூட அறிக்கைகளின் பிரகாரம் 2017 யூலையின் பின்னர் 771,652Kg பால்மா உற்பத்தி குறைபாடற்றிருந்த போதிலும் அவை மனித நுகர்விற்குப் பொருத்தமற்றதாக காணப்படுகின்றதென கூறி நுகர்வோரிடமிருந்து முறைப்பாடுகள் பெறப்பட்டதன் காரணமாக 2017 ஆகஸ்ட் மாதத்தில் ருபா 475.2 மில்லியன் பெறுமதியான வழங்கப்பட்ட 720,000Kg பால்மா களஞ்சியத்திற்கு மீளவும் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் பின்னர் அவை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் விலங்குகளின் உணவிற்காக விற்பனை செய்யப்பட்டிருந்ததுடன் மிகுதி 666,075 Kg 2019 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அம்பேவல தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | மனித நுகர்விற்கான பொருத்தத்தன்மையை முழுமையாக பரிசோதித்த பின்னர் மாத்திரமே பால்மா சந்தைக்கு வழங்கப்பட வேண்டும். |

### 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 26 தொடக்கம் 30 வரையான இருப்பு மெய்மையாய்வை புலனாய்வு செய்த போது முதல் வந்தது முதல் வெளியே முறையின் பிரகாரம் இருப்பு களஞ்சியப்படுத்தப்படாததன் காரணமாக இருப்பு காலாவதியாகுதல் ஆபத்து உயர்வாக காணப்பட்டது. மேலும் இருப்பிலுள்ள மேலதிக பொருட்களை பேணுதல் மற்றும் அழிவிற்காக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. ஆகக்கூடிய இருப்பு மட்டம், ஆகக்குறைந்த இருப்பு மட்டம் மற்றும் மீள்கட்டளை மட்டத்தை | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | இருப்பு காலாவதியாகாமலும் இருப்பு அழிவின்றியும் பொருத்தமானவாறு இருப்புக் கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குறிப்பிடுவதற்கு இருப்பு பதிவேட்டு அட்டைகள் காணப்பட்ட போதிலும் அதில் அளவுகளை குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலதிக அவதானிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன. | | |
| **(ஆ) திகன பால் தொழிற்சாலை** | | |
| (i) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரை பெறப்பட்ட ரூபா 11,045,003 பெறுமதியான உற்பத்திப் பொருள் பொதியிடுதல் இருப்பு 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய இருப்பு மெய்மையாய்வு மூலம் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்பட்டதுடன் அவ் இருப்பு 2018 திசெம்பர் 31 இல் இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகளில் சேதமடைந்த இருப்பாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | இருப்பு மதிப்பீட்டு அறிக்கைகளில் பயன்படுத்தப்பட முடியாத இருப்பு அறிக்கையிடப்பட வேண்டியதுடன் சரியான இருப்பு நிலைமை கணக்குகள் ஊடாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ii) கணக்காய்வின் போது ரூபா 326,940 பெறுமதியான 137 பயன்படுத்த முடியாத இயந்திர உதிரிப்பாகங்கள், ரூபா 350,992 பெறுமதியான 13 வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் பெறுமதி இனங்காணப்பட முடியாதிருந்த 75 வாகனங்கள் மற்றும் இயந்திர உதிரிப்பாகங்கள் களஞ்சியத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | பயன்படுத்தப்படாத பாகங்கள் தொடர்பாக சொத்து மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் சொத்து மெய்மையாய்வு சபையின் பரிந்துரைகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| **(இ) அம்பேவல தொழிற்சாலையிலுள்ள பொறியியல் களஞ்சியம் தொடர்பான அவதானிப்புக்கள்** | | |
| (i) பொறியியல் களஞ்சியத்தின் மாதிரிப் பரீட்சிப்பின் போது 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 7,443,498 பெறுமதியான 43 பொருட்களிற்குரிய 67 பாகங்கள் 2 ஆண்டுகள் தொடக்கம் 25 ஆண்டுகள் வரையான காலவீச்சில் களஞ்சியத்தில் செயற்பாடற்றிருந்ததுடன் கம்பனியின் ஏனைய தொழிற்சாலைகளிற்காக அவ் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | உரிய உபகரணங்களை பயன்படுத்துவதற்கு அல்லது அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| உபகரணங்களை பயன்படுத்தக்கூடிய தன்மை தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ii) 2014 ஆம் ஆண்டின் வருடாந்த இருப்பு கணிப்பீட்டின் போது ரூபா 6,041,166 பெறுமதியான 2041 இருப்பு பொருட்கள் பயன்படுத்தப்பட முடியாதவையாக தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும் இருப்பு கணக்காய்வு திகதியான 2018 திசெம்பர் 18 இல் குறைபாடுடைய மூலப்பொருளாக உற்பத்திப் பிரிவின் களஞ்சியத்தில் தற்போதும் அவை காணப்பட்டன. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | அப் பொருட்களை அகற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (iii) பொறியியல் களஞ்சியத்திலிருந்து மூலப்பொருட்களை வழங்கும் போது பொறுப்பான உத்தியோகத்தரின் அங்கீகாரம் மீது ஒவ்வொரு பணிக்காகவும் தனியான பொருள் பெறுகை குறிப்புக்கள் வழங்கப்படுவதை இயலச் செய்வதற்கு போதுமான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டிய போதிலும் இது மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | மூலப்பொருட்களை வழங்கும் போது போதுமான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்பட வேண்டும். |
| (iv) தொழிற்சாலை நவீனமயப்படுத்தல் செயற்திட்டத்தின் கீழ் புதிய தொழிற்சாலையை அமைத்த பின்னர் எதிர்கால பயன்பாட்டிற்காக வழங்கப்பட்ட அனைத்து உதிரிப்பாகங்களும் எந்தவொரு வகைபிரிப்புமின்றி குவித்து களஞ்சியப்படுத்தப்பட்டிருந்ததுடன் அம் மூலப்பொருள் பொருளிருப்பில் அல்லது வேறு ஏதாவது ஆவணப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | மூலப்பொருளானது பொருளிருப்பு ஆவணமொன்றில் அறிக்கையிடப்பட வேண்டும். |
| **(ஈ) அம்பேவல தொழிற்சாலையில் களஞ்சியப்படுத்தப்படுகின்ற பொதியிடும் மற்றும் பூர்த்தியடைந்த பொருட்கள்** | | |
| (i) கொழுப்பற்ற பால்மா பொதியிடுவதற்காக 2018 ஆம் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | கம்பனியானது சரியான இருப்பு மட்டங்களை |

| | | |
|---|---|---|
| ஆண்டின் போது 1858Kg கூட்டுமொத்தமான பொலித்தீன் பொதியிடுதல் மூலப்பொருள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் கடைசி கொள்வனவு திகதியான 2018 ஆகஸ்ட் 13 இல் பொருளிருப்பு 21,459Kg ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 10,413,024 பெறுமதியான 17,454.88Kg மேலதிக பொருளிருப்பு காணப்பட்டது. | | உருவாக்கி அவற்றை வினைத்திறனாகவும் சிக்கனமாகவும் பேண வேண்டும். |
| (ii) 2016 ஆம் ஆண்டிற்கு முன்னர் பயன்படுத்தப்படாத ரூபா 15,699,277 பெறுமதியான 17,750Kg பால்மா பொதியிடுதல் (metalized polyandry) மற்றும் 31,000 உர பைகள் என்பன அம்பேவல தொழிற்சாலையில் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழக்கற்றுப்போன இருப்பாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | | இருப்பு மெய்மையாய்வு முறையாக மேற்கொள்ளப்பட வேண்டியதுடன் வழக்கற்றுப்போன இருப்பை இனங்கண்ட பின்னர் முறையாக அறிக்கையிடப்பட வேண்டும். |
| (உ) அம்பேவல தொழிற்சாலையில் மூலப்பொருளாக வெண்ணெயை பயன்படுத்துவதன் மூலம் நெய் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் காலாவதியாகியிருந்த 30,000Kg வெண்ணெயை பயன்படுத்துவதன் மூலம் நெய் உற்பத்தி திறன் 24,427Kg ஆக காணப்பட்டது. அதன் பிரகாரம் இவ் இருப்பு தொடர்பாக ரூபா 23,796,840 பெறுமதியான நட்டம் ஏற்பட வேண்டியிருந்ததுடன் இது 2018 திசெம்பர் 31 வரை இருப்பு சேதம் மற்றும் நட்டமாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | இருப்பு சேதம் மற்றும் நட்டம் இனங்காணப்பட்டு சரியாக கணக்குகளில் அறிக்கையிடப்பட வேண்டும். |
| (ஊ) அம்பேவல தொழிற்சாலையிலுள்ள பொது களஞ்சியத்தின் இருப்பு மெய்மையாய்வில் இருப்பு புத்தக மீதிகளை ஒப்பீடு செய்யும் போது ரூபா 601,847 பெறுமதியான 03 பொருட்கள் பற்றாக்குறையாகவும் ரூபா 46,752,278 பெறுமதியான 05 | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | வழங்கப்படும் இருப்பு பதிவேட்டுப் புத்தகங்களில் சரியாக உள்ளடக்கப்பட வேண்டியதுடன் அவை பொறுப்பான உத்தியோகத்தர் |

| | | | |
|---|---|---|---|
| | பொருட்கள் மேலதிகமாகவும் காணப்பட்டன. அத்துடன் களஞ்சியமானது உள்ளகக் கட்டுப்பாடின்றி பாதுகாப்பற்று பேணப்பட்டிருந்ததுடன் உற்பத்தி பிரிவிடமிருந்து பெறப்படுகின்ற மற்றும் களஞ்சியத்திலிருந்து வழங்கப்படுகின்ற இருப்புக்களை முறையாக பதிவேட்டுப் புத்தகங்களில் உள்ளடக்குகின்றமை தொடர்பாக பொறுப்பான உத்தியோகத்தர் ஊடாக பரீட்சிப்பதற்கான தொழில்நுட்பங்கள் காணப்படவில்லை. | | ஒருவர் ஊடாக பரீட்சிக்கப்பட வேண்டும். |
| (எ) | அம்பேவல தொழிற்சாலையின் வெண்ணெய் பொதியிடும் இயந்திரம் 2018 ஒக்தோபரில் திருத்தம் செய்வதற்காக கொழும்பிலுள்ள தனியார் நிறுவனமொன்றிற்கு கையளிக்கப்பட்டிருந்த போதிலும் அவ் இயந்திரம் கணக்காய்வுத் திகதியான 2018 திசெம்பர் 26 வரையிலும் திருத்தம் செய்யப்பட்டு மீண்டும் கையளிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் 03 மாத காலப்பகுதிக்கு இவ் உற்பத்தி நிறுத்தப்பட்டதன் காரணமாக 2018 திசம்பர் 31 இல் உள்ளவாறு பொதியிடப்படாமல் 12,225Kg வெண்ணெய் இருப்பு காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் தொழிற்சாலை இயந்திரங்களை திருத்தம் செய்வதற்கான நடவடிக்கைகளை உத்தியோகத்தர்கள் எடுக்க வேண்டியதுடன் உரிய காலப்பகுதியினுள் அவை மீண்டும் கொண்டுவரப்பட வேண்டும். |
| (ஏ) | மேற்படி இயந்திரத்தை திருத்தம் செய்வதிலுள்ள தாமதம் காரணமாக 200g வெண்ணெய் பொதியிடும் அலகுகளிற்கு ரூபா 8.42 கிரயமான அலுமினியம் பொதியிடலை பயன்படுத்துவதற்குப் பதிலாக ரூபா 9.12 கிரயமான பிளாஸ்ரிக் பொதியிடலை பயன்படுத்துகின்றமை கம்பனிக்கு தீமையானதாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | கம்பனிக்கு நன்மையளிக்கும் வெண்ணெய் பொதியிடல் வழிமுறைகள் தெரிவுசெய்யப்பட வேண்டும். |
| (ஐ) | அம்பேவல பால் தொழிற்சாலையில் புதிய இயந்திரமுள்ள ஏழாவது மாடியில் பாலை மாவாக மாற்றுகின்ற உலர்த்தியுள்ளதுடன் (dryer) அதில் உற்பத்தியின் பின்னர் சுத்தப்படுத்துவதற்காக அகற்றப்படும் நான்கு முனைகள் (nozzles) பொருத்தப்பட்டுள்ளன. மேலும் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | உற்பத்திப்பொருட்கள் ஆரோக்கியத்திற்கு பாதுகாப்பானவை என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள். |

| | | | |
|---|---|---|---|
| | உற்பத்தியை ஆரம்பிப்பதற்கு அடுத்த நாளில் அம் முனைகள் பொருத்தப்படும் வரை உலதுர்த்தியின் துளை மூடப்படாததால் மனித நுகர்விற்கு பொருத்தமற்ற உற்பத்திக்கு சேகரிக்கப்படும் பொருள் ஆபத்து இருப்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஒ) | புதிய இயந்திரத்தில் வேலை செய்வதற்கு எப்பொழுதும் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட ஊழியர்கள் காணப்பட்ட போதிலும் ஏழாவது மாடியில் ஏதாவது அவசரகாலத்தின் போது வெளியேறுவதற்கு கதவொன்று காணப்படவில்லை. மேலும் அம்பேவல வளாகம் முழுவதும் அவசரகால தீயணைப்பிற்கு பயன்படுத்தப்பட்ட தீயணைப்பு சிலிண்டர்கள் காலாவதியாகியிருந்ததுடன் அவற்றில் எந்தவொரு மறுசீரமைப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | கட்டிடத்தில் பணிபுரிகின்ற ஊழியர்களின் பாதுகாப்பிற்காகவும் தீ சேதம் மற்றும் ஏனைய அவசர காலங்களிலிருந்து நிறுவப்பட்ட இயந்திரங்களிற்காகவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஓ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 4 ஏக்கர் முழுவதும் 4 கட்டிடங்களை உள்ளடக்கி பரந்திருக்கின்ற அம்பேவல தொழிற்சாலையில் பணிபுரிகின்ற 234 ஊழியர்களிற்கான சுகாதார வசதிகள் போதுமானதும் பொருத்தமானதுமானதுமாக காணப்படாதமை அவதானிக்கப்பட்டது. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | தொழிற்சாலையில் ஊழியர்களிற்கு போதுமானதும் பொருத்தமானதுமான சுகாதார வசதிகளை வழங்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஔ) | அம்பேவல பால் தொழிற்சாலை மற்றும் டிகானா பால் தொழிற்சாலை என்பவற்றிற்கான இருப்பு புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலையில் அதிகளவு பொருட்கள் இருப்பதனால் ஆவணம் பேணப்பட்டிருக்காததுடன் அதற்காக பின் அட்டைகள் (Bin cards) பயன்படுத்தப்பட்டன. GRN மற்றும் MRN அட்டைகளை பயன்படுத்தி பின் அட்டைகள் நாளதுவரையாக்கப்பட்டிருந்தன. | தொழிற்சாலையின் உள்ளக புலனாய்வு மற்றும் கட்டுப்பாட்டிற்காக பொருளிருப்பு புத்தகங்களை பேணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஃ) | டிகானா பால் தொழிற்சாலைக்கான மின்சார பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் பதிவேடு | எதிர்காலத்தில் முறையான ஆவணங்களை | மின்சார பொருத்துக்கள் மற்றும் உபகரணங்கள் |

| | | | |
|---|---|---|---|
| | பேணப்பட்டிருக்கவில்லை. | பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |
| (க) | பிணை வைக்க வேண்டிய சில உத்தியோகத்தர்கள் பிணையை கொண்டிருக்காததுடன் பிணை பதிவேடும் பேணப்பட்டிருக்கவில்லை. | தற்போது காசாளர் மாத்திரம் பிணை வைப்பை பேணுகின்றதுடன் எதிர்காலத்தில் பிரதான அலுவலகத்தின் கட்டுப்பாட்டுப் பிரிவின் வழிகாட்டலிற்கு இணங்க பிணை வைப்புக்களை பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். | பிணைகளை பேணுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (கா) | நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையான பதிவேடொன்று எதிர்காலத்தில் பேணப்படும். | சொத்துக்களை முகாமை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (கி) | கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | தொழிற்சாலையின் நிலையான சொத்துக்கள் தொடர்பான சுருக்கமான கணனிமயப்படுத்தப்பட்ட ஆவணம் நாளதுவரையாக்கப்பட்ட ள்ளதுடன் அனைத்து நிலையான சொத்துக்கள் தொடர்பாக முறையான பதிவேடொன்று எதிாகாலத்தில் பேணப்பட நடவடிக்கை எடுக்கப்படும். | கணனி வன்பொருள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்து பதிவேடொன்று பேணப்பட வேண்டும். |

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | டிகானா பால் தொழிற்சாலையில் வனிலா மற்றும் சொக்கலேட் பால் பானங்களை உற்பத்தி செய்கின்ற இயந்திரம் செயலற்றதாக மாறுவதற்கு முன்னர் 2017 யூன் தொடக்கம் | இது வழங்குநரின் தாமதமாக காணப்பட்டது. | தொழிற்சாலை இயந்திரங்களின் திருத்தங்கள் மற்றும் பராமரிப்பு முறையாக பேணப்படுவதற்கும் கம்பனிக்கு பெறப்பட வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | 2018 மார்ச் வரை 250ml பால் போத்தல்களை உற்பத்தி செய்வதன் மூலம் ரூபா 124,885,082 தொகையும் 500ml பால் போத்தல்களை உற்பத்தி செய்வதன் மூலம் ரூபா 15,082,405 தொகையும் உழைக்கப்பட்டிருந்த போதிலும் 2018 மார்ச் தொடக்கம் 2019 மே 03 வரையான 01 ஆண்டும் 02 மாதங்களுமான காலப்பகுதிக்கு இயந்திரம் செயற்பாடற்று இருந்ததன் காரணமாக கம்பனிக்கு பெறப்பட வேண்டியிருந்த வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | | வருமானத்தை பெறுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் 4.2.3 மற்றும் 4.2.6 ஆம் பிரிவுகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கைகள் காலாண்டு, அரையாண்டு மற்றும் வருடாந்தம் தயாரிக்கப்பட்ட பின்னர் அவை பொதுமுயற்சிகள் திணைக்களம், உரிய அமைச்சு மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதி ஆகியோரிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கம்பனியால் அறிக்கைகள் வருடாந்தம் தயாரிக்கப்படுகின்றதால் செயலாற்றல் அறிக்கைகளை தனியாக தயாரித்தல் அவசியமற்றது என அமைச்சின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ கூட்டத்தில் அறிவிக்கப்பட்டிருந்தது. | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டிற்காக கம்பனியால் அமைச்சின் வருடாந்த அறிக்கைக்கு சமர்ப்பிக்கப்பட்ட செயலாற்றல் அறிக்கையின் பிரகாரம் கீழேயுள்ள காரணிகள் அவதானிக்கப்பட்டன. | | |
| | (i) 2018 ஆம் அண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் 119.94 மில்லியன் லீற்றர் பாலை சேகரிப்பதற்கு திட்டமிட்டிருந்த போதிலும் உண்மையாக சேகரிக்கப்பட்ட பால் 91.10 மில்லியன் லீற்றர் மாத்திரமேயாகும். அத்துடன் இது எதிர்பார்க்கப்பட்ட தொகையில் 76 சதவீதமாக | அரசியல் நிலைமை பாதகமாக தாக்கமளித்தன் காரணமாக பல தீவுப் பகுதிகளில் பால் உற்பத்தி குறைக்கப்பட்டிருந்ததுடன் நிதிச் சிக்கல்கள் காரணமாக பால் பண்ணையாளர்களிற்கான கொடுப்பனவுகளை தாமதிப்பதில் தாக்கமொன்று காணப்பட்டது. | நிலவுகின்ற உள்ளக மற்றும் வெளியக காரணிகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | காணப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் சேகரிக்கப்பட்ட 96.20 மில்லியன் லீற்றர் தொகையை விட 2018 ஆம் ஆண்டில் ஒப்பீட்டளவில் 5.11 மில்லியன் லீற்றர் குறைவாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் மூலம் திட்டமிடப்பட்ட செயற்திட்டங்களின் செயன்முன்னேற்றத்தை பரீட்சிக்கும் போது புதிய தன்னாட்சி பால் பண்ணையாளர் சங்கத்தை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் 37 சதவீதமாக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 200 லீற்றர் நாளாந்த பால் திறன் கொண்ட பண்ணைகளை ஆரம்பித்தல் தன்னாட்சி சங்கத்தின் உத்தியோகத்தர்களிற்கான ஒரு நாள் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துதல் 41 சதவீதமாக காணப்பட்டதுடன் உண்மையாக கொள்வனவு செய்யப்பட்ட தொகை ஒப்பீட்டளவில் மீளாய்வாண்டின் இலக்குகளிற்கு 50 சதவீதத்தை விடக் குறைவாக காணப்படுகின்றது. | நிலவுகின்ற நிதி நிலைமை காரணமாக எதிர்பார்க்கப்பட்டவாறு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களை எதிர்கொள்ள முடியாதிருந்தது. | நிலவுகின்ற உள்ளக மற்றும் வெளியக காரணிகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் நாளதுவரையாக்கப்பட வேண்டும். |
| (ஈ) | கம்பனியின் பால் உற்பத்திகளின் செயன்முன்னேற்றத்தை பரீட்சித்த போது 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2018 ஆம் ஆண்டில் pasteurized பால் உற்பத்தி 19 சதவீதத்தால் அதிகரித்திருந்த போதிலும் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 24 சதவீதத்தால் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் | | எதிர்பார்க்கப்பட்ட உற்பத்தி செயன்முன்னேற்றத்தை அடைந்துகொள்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

பாலாடைக்கட்டி (Cheese) உற்பத்தி 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 21 சதவீதத்தால் அதிகரித்திருந்ததுடன் 2016 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது 14 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது. யோகட் உற்பத்தி மற்றும் பால்மா உற்பத்தி என்பன 2017 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் முறையே 0.4 சதவீதத்தாலும் 9 சதவீதத்தாலும் குறைவடைந்திருந்தன.

### 3.4 செயற்பாடற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்பட்ட ஆதனம், பொறி மற்றும் உபகரணம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2011 யூன் 27 இல் கம்பனியால் கேள்வி கோரப்பட்ட பின்னர் 2012 சனவரி 31 ஆம் திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் 2013 சனவரி 17 இல் தனியார் நிறுவனமொன்றுடன் கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் பிரதான அலுவலகம் 2013 மே 09 அளவில் நிறுவுதலை பூர்த்தி செய்வதற்கு இணங்கப்பட்ட ரூபா 12,470,778 (ஐ.அ.டொலர் 94,500) பெறுமதியான ஐஸ்கிறீம் இயந்திரமொன்றை ரூபா 214,700 நிறுவுதல் பெறுமதியுடன் கொள்வனவு செய்திருந்தது. பின்னர் அவ் இயந்திரம் 2014 ஏப்ரலில் டிகானா தொழிற்சாலைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் இது கணக்காய்வுத் திகதியான 2018 திசெம்பர் 24 வரை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. (இந் நிலைமை முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்களினால் ஏற்பட்டது.) | தேவைப்பாட்டை சரியாக இனங்கண்ட பின்னர் மாத்திரம் கொள்வனவு செய்வதற்கும் அச் சொத்துக்களை பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவம் கணக்களிப் பொறுப்புடையதாக இருக்க வேண்டும். |
| (ஆ) நாளாந்தம் 3000Kg வெண்ணெய்யை உற்பத்தி செய்கின்ற பழைய வெண்ணெய் உற்பத்தி இயந்திரம் புதிய | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. (இந் நிலைமை முகாமைத்துவக் கட்டுப்பாட்டிற்கு அப்பாலுள்ள காரணங்களினால் ஏற்பட்டது.) | பழைய இயந்திரத்தை மீளப்பயன்படுத்தும் இயலுமையை கண்டறிவதற்கு அல்லது அதனை |

| | | | |
|---|---|---|---|
| | இயந்திரம் பெறப்பட்ட பின்னர் உற்பத்தியிலிருந்து அகற்றப்பட்டிருந்ததுடன் கணக்காய்வுத் திகதியான 2018 நவம்பர் 18 இல் உள்ளவாறு 1½ வருடங்களாக பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. | | அகற்றுவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சேதமடைந்த மற்றும் காணாமல் போன சொத்துக்கள் தொடர்பாக பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | சேதமடைந்த மற்றும் காணாமல் போன சொத்துக்கள் தொடர்பாக தனியான ஆவணமொன்று பேணப்படுவதில்லை. | சேதமடைந்த மற்றும் காணாமல் போன சொத்துக்களின் நட்டங்களை இனங்காண்பதன் மூலம் தேவையான சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | வருடாந்த சொத்து மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் புதிய சுற்றுலா விடுதிக் காப்பாளர் வருகின்ற போது அல்லது முன்னைய சுற்றுலா விடுதிக் காப்பாளர் சேவையிலிருந்து விலகிய போது சொத்து மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிரக்கவில்லை. | கடமை தொடர்பான செயலாற்றலை மதிப்பிட்ட பின்னர் உதவி ஊழியரொருவரிற்கு 2018 திசெம்பர் 19 ஆம் திகதி எழுத்து மூலம் அனைத்துச் சொத்துக்களையும் கையளிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. | உள்ளக புலனாய்வு மற்றும் கட்டுப்பாட்டிற்காக வருடாந்த சொத்து மெய்மையாய்வொன்றை மேற்கொள்வதற்கும் கணக்குகள் ஊடாக சரியான தகவலை சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | முகாமைத்துவத்தால் இருப்பு மட்டங்கள் தீர்மானிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்புடன் இணங்கப்பட்டுள்ளது. தொழிற்சாலை களஞ்சிய வசதிகள் மட்டுப்படுத்தப்படுகின்றதுடன் எதிர்காலத்தில் களஞ்சிய வசதிகள் விஸ்தரிக்கப்படும். | மேலதிக இருப்பு மற்றும் இருப்பு சேதங்களை தடுப்பதற்கு முகாமைத்துவம் இருப்பு மட்டங்களை தீர்மானிக்க வேண்டும். |

**3.5 முறையாக கொள்வனவு செய்யப்படாத காணிகள் மற்றும் ஆதனங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அம்பேவல தொழிற்சாலை அமைந்துள்ள காணி 1980 மார்ச் 10 இல் அளவிடப்பட்டிருந்ததுடன் 40 ஏக்கர்கள், 01 றூட் மற்றும் 36 பேர்ச்களை கொண்டிருந்த 4754 | காணிக்கான ஐம்பது ஆண்டு வரி அதிகாரம் 1998 மார்ச் 07 இல் அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் | காணிகளின் உரிமைத்துவத்தை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| ஆம் இலக்க திட்டத்திற்கு சொந்தமாக காணப்பட்டது. மேலும் அங்கே ரூபா 5,548 மில்லியன் பெறுமதியான கம்பனிக்குச் சொந்தமான நிர்மாணங்கள் மற்றும் பொருத்துக்கள் காணப்பட்ட போதிலும் காணியின் உரிமைத்துவத்தை கம்பனிக்கு பெற்றுக்கொள்வதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வழங்கப்பட்டுள்ளது. |

## 3.6 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது மூலதனச் சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் மூலதன சொத்துக்களை திருத்தம் செய்வதற்காக முறையே ரூபா 564 மில்லியன் மற்றும் ரூபா 217 மில்லியன் தொகைகளை கம்பனி ஒதுக்கியிருந்த போதிலும் 2006 ஆம் ஆண்டின் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | - | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 3.7 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) அம்பேவல தொழிற்சாலையின் பாதுகாப்பு சேவை தனியார் நிறுவனமொன்றிலிருந்து பெறப்பட்டிருந்ததுடன் பாதுகாப்பு பிரிவால் சமர்ப்பிக்கப்பட்ட கையொப்பமிடப்பட்ட அறிக்கைகளின் பிரகாரம் கம்பனி அவர்களிற்கு கொடுப்பனவு செய்கின்றது. எனினும் தொழிற்சாலை முகாமைத்துவத்தால் அவர்களின் வருகை மற்றும் | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | உள்ளகக் கட்டுப்பாட்டை முறையாக பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளிச்செல்லல்கள் மேற்பார்வை செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் கைவிரல் அடையாள இயந்திரங்கள் மூலம் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல்களை பதிவு செய்வதன் மூலம் போதியளவு உள்ளகக் கட்டுப்பாடொன்றை உருவாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2018 ஏப்ரல் மாத மேலதிக நேரக் கொடுப்பனவை புலனாய்வு செய்ததன் பிரகாரம் மில்கோ கம்பனியின் நரஹேன்பிட்டிய தொழிற்சாலைக்குரிய 22 ஊழியர்களின் தெரிவுசெய்யப்பட்ட மாதிரி தொடர்பாக அவ் ஊழியர்கள் வேலை செய்த உண்மையான நேரத்தை விட கூடுதலாக மேலதிகநேரக் கொடுப்பனவு செலுத்தப்பட்டதன் காரணமாக மாதாந்தம் மேலதிகமாக கொடுப்பனவு செய்யப்பட்ட தொகை ரூபா 383,237 ஆக காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | கணக்காய்வு அவதானிப்பின் பிரகாரம் இரவில் பணிபுரியும் ஊழியர்களிற்கு போக்குவரத்து வசதிகளை வழங்குவதற்கும் நள்ளிரவு கடந்தும் வேலைசெய்கின்ற ஊழியர்களிற்கு ஓய்வெடுக்கவும் காலையில் மீண்டும் வேலையை தொடங்குவதற்கும் முறையொன்றின் பிரகாரம் மெய்நிகர் (virtual) மேலதிகநேரக் கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்றது. | கொடுப்பனவொன்றை மேற்கொள்ளும் போது முறையான பரீட்சிப்பின் பின்னர் உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளிற்கிணங்க உறுதிச்சீட்டிற்கான அனுமதி மற்றும் அங்கீகாரம் வழங்கப்பட வேண்டும். |

**3.8 வாகனக் கட்டுப்பாடு**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கம்பனியில் ஒவ்வொரு வாகனத்திற்கும் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட வேண்டிய போதிலும் டிகானா பால் தொழிற்சாலையிலுள்ள 10 வாகனங்கள் தொடர்பாக சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட்டிருக்கவில்லை. | முகாமைத்துவத்திற்கு வழங்கப்பட வேண்டிய அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பேணப்படும். | வாகனங்களை முறையாக முகாமை செய்வதற்கு சம்பவத்திரட்டுப் புத்தகங்கள் பேணப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்களிற்குப் பொறுப்பாகவுள்ள உத்தியோகத்தரால் அவர் பொறுப்பாகவுள்ள மோட்டார் வாகனங்களின் விபரங்கள் மற்றும் ஏனைய பொருத்தமான விபரங்கள் உள்ளடங்கிய | கம்பனியின் அனைத்து வாகனங்கள் பற்றிய விபரமான அறிக்கை பிரதான அலுவலகத்தின் போக்குவரத்து பிரிவால் பேணப்படுகின்றதுடன் டிகானா தொழிற்சாலையில் மோட்டார் | ஒவ்வொரு தொழிற்சாலையிலும் வாகனத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர் அவர் பொறுப்பாகவுள்ள |

| | | |
|---|---|---|
| மோட்டார் வாகன பட்டியலொன்று பேணப்பட வேண்டிய போதிலும் டிகானா பால் தொழிற்சாலையில் அத்தகைய வாகன பட்டியலொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | வாகன பட்டியலொன்று பேணப்படுவதில்லை. எதிர்காலத்தில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் மோட்டார் வாகன பட்டியலின் பிரதியொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வாகனங்கள் தொடர்பான விபரங்களை பேணுதல் வேண்டும். |

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| (அ) 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5.1.2 ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய 12 ஆம் இலக்க பொதுமுயற்சிகள் சுற்றறிக்கை என்பவற்றின் பிரகாரம் 2018-2020 காலப்பகுதிக்கான வணிகத் திட்டத்தில் கம்பனிக்கு தற்போது சொந்தமாகவுள்ள சந்தைகள், வழங்குநர்களின் விபரங்கள் மற்றும் அமைப்பு ரீதியான கட்டமைப்பு என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | அமைப்பு ரீதியான கட்டமைப்பு வணிகத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருக்காதது டன் எதிர்காலத்தில் வணிகத் திட்டத்தை தயாரிக்கும் போது இது உள்ளடக்கப்படும். | பொதுமுயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் முழுமையான தகவல்களை உள்ளடக்கி திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) 2014 பெப்ரவரி 11 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 5(2) ஆம் பந்தியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய பாதீட்டு நிதி நிலைமைக்கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, மனித வள அபிவிருத்தி திட்டம், கடன் மீள்கொடுப்பனவு திட்டம், உள்ளகக் கணக்காய்வு திட்டங்கள், நிறுவனத்தின் நாளதுவரையாக்கப்பட்ட அமைப்புரீதியான கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஏற்கனவேயுள்ள பதவியணியினர் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | காசுப்பாய்ச்சல் கூற்று, மனித வள அபிவிருத்தி திட்டம், கடன் மீள்கொடுப்பனவு திட்டம், நாளதுவரையாக்கப்பட்ட அமைப்புரீதியான கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் ஏற்கனவேயுள்ள பதவியணியினர் விபரங்கள் தனியாக தயாரிக்கப்பட்டிருந்தன. | சுற்றிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| (இ) பொறியியல் களஞ்சிய பிரிவில் 2018 சனவரியில் நிறுவப்பட்டு செயற்படுத்தப்பட்ட பொருளிருப்பு | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | கணனி மென்பொருளிலுள்ள பலவீனமான |

| | | | |
|---|---|---|---|
| | முகாமைத்துவ மென்பொருளை கம்பனி கணனிமயப்படுத்தியிருந்த போதிலும் பொருளிருப்பு மீதியில் அந்நாளிற்கு முதல்நாள் பெறப்பட்டவைகள் மற்றும் வழங்கப்பட்டவைகளை பரீட்சிப்பதற்கான வசதிகள் காணப்படவில்லை. அத்துடன் பொருளிருப்பு அளவை அலகுகளும் (உதாரணமாக: லீற்றர், கிலோகிராம், மீற்றர்) உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 103 பொருளிருப்பு விடயங்கள் அந்நாளில் எதிர்மறை பெறுமதியை எடுத்திருந்தன. மென்பொருள் ஊடாக வழங்கப்படுகின்ற பொருளிருப்பு மீதியின் சரியான தன்மையை ஏற்றுக்கொள்ள முடியாத நிலைமை காணப்பட்டதுடன் 2018 திசெம்பர் 31 வரை இப் பலவீனமான விடயங்களை இனங்கண்டு திருத்தம் செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | விடயங்களை நாளதுவரையாக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2003 யூன் மாத நல்லாளுகைக்கான பொதுமுயற்சிகள் சுற்றிக்கையின் 5.2.5 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு 15 நாட்களிற்கு முன்னர் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட பாதீடு தயாரிக்கப்பட்டு வரிசை அமைச்சு, திறைசேரியின் பொதுமுயற்சிகள் திணைக்களம் மற்றும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 ஆம் ஆண்டிற்கான மூலதன பாதீடு 2018 மார்ச் 12 இலும் மீண்டெழும் பாதீடு 2018 மே 02 இலும் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்டு 2019 செப்தெம்பர் 19 இல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. | இணங்காதிருப்பதற்கு எதுவும் இல்லை. | பொதுமுயற்சிகள் சுற்றிக்கையின் பிரகாரம் உரிய திகதியில் பாதீட்டை தயாரித்து அங்கீகரிப்பதற்கும் நிதிகள் முறையாக கட்டுப்படுத்தப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | கம்பனியால் தயாரிக்கப்பட்டிருந்த மூலதனப் பாதீட்டில் உள்ள கொள்வனவுகள் மற்றும் திருத்தங்களின் ரூபா 392.48 மில்லியன் தொகை செயல்நடவடிக்கைத் திட்டத்தில் | அனைத்து செலவின விடயக் குறியீடுகளிற்கும் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்பட முடியாதிருந்தன. அபிவிருத்தி | மூலதன பாதீட்டில் உள்ளடக்கப்பட்ட செலவின விடயக் குறியீடுகள் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் |

| | | |
|---|---|---|
| உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நடவடிக்கைகளிற்காக மாத்திரம் செயல்நடவடிக்கைத் திட்டங்கள் தயாரிக்கப்படுகின்றதுடன் இயந்திரம்/ கட்டிட புனரமைப்புக்கள் (பெரியளவிலானவை) திட்டமிடப்படுகின்றன. | உள்ளடக்கப்பட வேண்டும். |